TNTS120009642015



Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Shencottah.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commenc e ment of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 26.05.2013 | 15.6.13 | A1 – 15.06.13<br>A2, A3 – AB | A1 – 12.05.14<br>A2, A3 – 04.10.13 | 06.5.25 | 29.07.26 | 08.08.26 |
| C.S.D.10.05.14 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D.18.12.15 | | | | | | |
| D.Cogni.18.12.15 | | | | | | |
| A.P.D. 11.01.16 | | | | | | |

CC 476/2015 on the file of the Judicial Magistrate of Shencottah.

Complainant: The Sub Inspector of Police, Tenkasi A.W.P.S in Cr.No.30/2013

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| 1. Syed Majith<br>2. Sarthar (Died)<br>3. Sait | 47/14<br>–<br>50/14 | Ahamed Meeran |

| Caste or Religion | Calling | Residence | STATION |
|---|---|---|---|
| – | – | 1. 2/2001, Railway feeder road, Ravanasamuthiram.<br>2. –<br>3. Jawaharlal nehru street, Shencottah | Tenkasi AWPS |

**Offence** : Section 294(b), 406, 498(A), 506(1) IPC and 4 of TNPHW Act.

**Sentence** : A2 – died, A1, A3 are not found guilty U/s. 294(b), 406, 498(A), 506(1) IPC and 4 of TNPHW Act. A1, A3 are acquitted U/s 271(1) of BNSS.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.08.08 16:16:15 +0530

Judicial Magistrate,
Shencottah.

TNTS120009642015



நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,
நீதித்துறை நடுவர்,
2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08 ம் நாள் சனிக்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.476/2015**

CNR.No.TNTS120009642015

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையம், குற்ற எண்.30/2013 |
| | //எதிர்// | |
| குற்றம்சாட்டப்பட்டவர்கள் | – | 1. செய்யது மஜீத், (வயது 47/2014), த.பெ.அகமது மீரான், 2/2001, ரயில்வே பீடர் ரோடு, இரவணசமுத்திரம்.<br>2. சர்தார் (இறப்பு)<br>3. சேட், (வயது 50/2014), த.பெ.அகமது மீரான், ஜவஹர்லால் நேரு தெரு, செங்கோட்டை. |
| குற்றம் சாட்டப்பட்டது | – | 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 406, 498(A), 506(1) மற்றும் பிரிவு 4 of TNPHW Act |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 406, 498(A), 506(1) மற்றும் பிரிவு 4 of TNPHW Act |
| தீர்மானம் | – | 2 வது குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்துவிட்ட நிலையில், 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 406, 498(A), 506(1) மற்றும் பிரிவு 4 of TNPHW Act–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை |
| புகார்நாள் | – | 15.06.2013 |
| குற்றம்சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட நாள் | – | A1 –15.06.13<br>A2, A3 – AB |
| பிணையில் சென்ற நாள் | – | A1 –12.05.14<br>A2, A3 – 04.10.13 |
| கோப்பு நாள் | – | 18.12.2015 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 06.05.2025 |

| | |
|---|---|
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : 29.07.2026 |
| தீர்ப்புரை நாள் | : 08.08.2026 |

இவ்வழக்கு 18.12.2015 ம் தேதியன்று குவிமுச பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 2 வது குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்துவிட்ட நிலையில், 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வே.ஆதிபாலசுப்பிரமணியன் பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–

இவ்வழக்கின் புகார்தாரருக்கும், 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் கடந்த 25.12.2003 ம் தேதி இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடந்ததாகவும், புகார்தாரருக்கு திருமணத்திற்கு 70 களஞ்சி தங்க நகையும், ரூ.60,000/– ரொக்கமும் மற்றும் சீர்பாத்திரங்களும் கொடுக்கப்பட்டிருந்ததாகவும், புகார்தாரர் திருமணம் முடிந்த பின் மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குடும்பத்தினரோடு கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும் திருமணம் முடிந்த ஆரம்ப காலத்திலிருந்தே புகார்தாரரை 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவர் சந்தேகப்பட்டு பேசி துன்புறுத்தி வந்ததாகவும், 1 முதல் 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொழிலில் முதலீடு செய்வதற்காக புகார்தாரரின் நகைகளை கேட்டு லாபம் வந்ததும் திருப்பி தந்துவிடுவதாக பேசி வாங்கியுள்ளதாகவும், புகார்தாரரை 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவர் அடிக்கடி தேவிடியா என்ற அவதூறான வார்த்தையை சொல்லி அடித்து துன்புறுத்தும்போது மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் புகார்தாரரை மேலும் அடிக்கச் சொல்லி தூண்டுதலாக இருந்துள்ளதாகவும், இரண்டு வருட கூட்டுக்குடும்பத்திற்கு பின் 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவரும், புகார்தாரரும் தனியாக வாடகை வீட்டில் குடியிருந்து வந்தபோதும், புகார்தாரரிடமிருந்த மீதி நகைகளையும் 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவர் வாங்கியுள்ளதாகவும், அதன்பின்பு 1 வது

குற்றஞ்சாட்டப்பட்டவர், புகார்தாருக்கும், அவரது குழந்தைக்கும் சாப்பாட்டுக்கும், மற்ற செலவுக்கும் பணம் கொடுக்காமல் இருந்ததால், புகார்தாரர் அவரது நகைகளை திரும்ப கேட்டுள்ளதாகவும், அதனால் 1வது குற்றஞ்சாட்டப்பட்டவர், புகார்தாரரை தொடர்ந்து அவதூறாக பேசி நகைகளை தர முடியாது என மறுத்ததால், புகார்தாரர் அம்பாசமுத்திரம் மகளிர் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து விசாரணை செய்ததில், 1 முதல் 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் 2 மாத கால தவணைக்குள் புகார்தாரரின் நகைகளை திருப்பி கொடுத்துவிடுவதாகவும், அதுவரை புகார்தாரர் அவரது வீட்டில் இருக்கட்டும் என்று கூறி சென்றவர்கள் பல மாதம் ஆகியும், புகார்தாரரின் நகைகளை ஒப்படைக்காமலும், 1வது குற்றஞ்சாட்டப்பட்டவரின் சொத்துக்கள் எதுவும் புகார்தாரருக்கும், அவரது குழந்தைக்கும் சேரக்கூடாது என்று 2, 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் ஒப்படைத்துவிட்டதையும் தெரிந்த புகார்தாரர் 26.05.2013ம் தேதி 1 முதல் 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடமும் தனது நகைகளை பற்றியும், எதிர்கால வாழ்க்கையை பற்றியும் கேட்டதற்கு புகார்தாரரை 1 முதல் 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பெண் என்றும் பாராமல் தேவிடியாவுள்ள செறுக்கியுள்ள தேவிடியாமுண்ட என்று அவதூறாக பேசியும், இனிமேல் நகைகளை பற்றி கேட்டால் உயிரோடு விடமாட்டோம் என்று புகார்தாரருக்கு உடலளவிலும், மனதளவிலும் வேதனை ஏற்படுத்தியதாக 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 406, 498(A), 506(i) மற்றும் பிரிவு 4 of TNPHW Act–ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக தென்காசி அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரிவு 204 குவிமுச கீழ் 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில், 1 முதல் 3 குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்த நீதிமன்றத்தில் முன்னிலையான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. 1 முதல் 3 குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு 1 முதல் 3 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், 2வது குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்துவிட்ட நிலையில், 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 406, 498(A), 506(i) மற்றும் பிரிவு 4 of TNPHW Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவியபோது 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவங்கள் அனைத்தும் தெரிந்தது பற்றி கூறும் சாட்சிகள். அ.சா.4 பார்வை மகஜர் சாட்சி, அ.சா.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவர், அ.சா.6 குற்றஞ்சாட்டப்பட்டவரை கைது செய்தது பற்றி கூறும் சாட்சி. அ.சா.7 முதல்கட்ட விசாரணை செய்த சாட்சி, அ.சா.8 புலன்விசாரணை அதிகாரி ஆவார்கள்.

**<u>5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:</u>**

அ.சா.1 சுமையாள் பீவி சாட்சியத்தில், எதிரிகளைத் தெரியும் எனவும், 25.12.2003 ஆம் தேதி அ.சா.1க்கும், 1ம் எதிரிக்கும் பொட்டல்புதூர் ஹரிமண்டபத்தில் வைத்து திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின் போது அ.சா.1க்கு 70 களஞ்சி தங்க நகையும், 60 ஆயிரம் ரொக்கமும், பண்ட பாத்திரம் சீர்வரிசை கொடுத்ததாகவும், அதன்பின்னர் அ.சா.1ம், 1வது எதிரியும் வாழ்ந்து கொண்டிருக்கும்போது அவர்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டதாகவும், 1வது எதிரியும், மற்ற எதிரிகளும் சேர்ந்து கொண்டு சுயதொழில் செய்ய வேண்டும் என்று சொல்லி அ.சா.1 நகைகள் எல்லாம் வாங்கி அடகு வைத்து தொழில் செய்ததாகவும், எதிரிகள் அ.சா.1யை மீண்டும் மீண்டும் நகை வேண்டும், பணம் வேண்டும் என்று திரும்ப திரும்ப தொந்தரவு செய்ததாகவும்,

அ.சா.1 கணவர் அவரை சந்தேகப்பட்டு அடிப்பதாகவும், அதன்பின்பு அ.சா.1 அவரது அம்மா வீட்டிற்கு சென்று விட்டதாகவும், அதன் பின்னர் நாங்கள் பெரியோர்களை வைத்து எதிரியிடம் பேசியதாகவும், அவர்கள் எதற்கும் ஒத்து வரவில்லை எனவும், நகைகளை திரும்ப கேட்டபோது தருகிறேன் என்று சொன்னார்கள் கொடுக்கவில்லை எனவும், கடந்த எட்டு வருடத்திற்கு முன்பு நோட்டரி பப்ளிக் மூலம் கொடுப்பதாக ஐந்து லட்ச ரூபாய் கொடுப்பதாக பேசி முடித்து இருந்ததாகவும், அதன்பின்பு நீங்கள் என்ன வேணாலும் பண்ணிக் கொள்ளுங்கள் தர முடியாது என்று சொல்லிவிட்டதாகவும், அதன் பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 முகைதீன் பாத்திமா சாட்சியத்தில், அ.சா.1, அ.சா.2 மகள் எனவும், எதிரிகளை தெரியும் எனவும், 2003ம் வருடம் அ.சா.1 மகளுக்கும், 1வது எதிரிக்கும் பொட்டல் புதூர் ஹரி மண்டபத்தில் வைத்து திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின்போது 60 ஆயிரம் ரொக்கமும், 70 களஞ்சி நகையும் சீர்வரிசையாக கொடுத்ததாகவும், 2 மாதம் அ.சா.1 மகள் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும், அதன்பின்னர் தனியாக 1ம் எதிரியும், அ.சா.1 மகளும் குடும்பம் நடத்தியதாகவும், 1ம் எதிரி ஏஜென்சி எடுத்து நடத்துவதாக சொல்லி அ.சா.1 மகளின் நகைகளை சிறிது சிறிதாக வாங்கி முத்தூட் பேங்கி அடகு வைத்து கொஞ்ச நாள் நடத்தியதாகவும், அதன்பின்னர் அ.சா.1 மகளுக்கு குழந்தை பிறந்ததாகவும், அ.சா.1 மகளுக்கு குழந்தை பிறந்ததிலிருந்து 1ம் எதிரி சந்தேகப்பட்டு தொந்தரவு செய்ததாகவும், தேவடியா நகையை போட்டுக்கிட்டு எவன்கூட போகிறாய் என்று அசிங்கமாக பேசியதாகவும், அ.சா.1 மகளை 1வது எதிரி தலையணையால் முகத்தை அமுக்கி இரவு முழுவதும் சண்டை போடுவதால் எனது மகளை வீட்டிற்குள் பூட்டி சித்திரவதை செய்ததாகவும், அ.சா.1 மகள் மருத்துவமனைக்கு சென்றால் கூட எவன்கூட போயிட்டு வருகிறாய் என்று சந்தேகப்படுகிறார் எனவும், எதிரி அ.சா.1 மகளை தொந்தரவு செய்ததை அக்கம் பக்கம் உள்ளவர்கள் சொன்னதின்பேரில் கேள்விபட்டு அ.சா.1 அவரது மகளை வீட்டிற்கு கூட்டிவந்துவிட்டதாகவும், எதிரிகளிடம் நகையை கேட்டபோது இப்போது தருகிறேன், பிறகு தருகிறேன், வீட்டை விற்றுத் தருகிறேன் என்று சொன்னதாகவும்,

ஆனால் தற்போது வரை நகைகள் திரும்ப தரவில்லை எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 முகம்மது இப்ராகிம் சாட்சியத்தில், அ.சா.1, அ.சா.3 உடன்பிறந்த சகோதரி, எதிரிகளை தெரியும், கடந்த 2003ம் வருடம் அ.சா.3 சகோதரியை 1ம் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்ததாகவும், திருமணத்தின்போது 70 களஞ்சி நகையும், ரூபாய் 60 ஆயிரம் ரொக்கம், பண்ட பாத்திரம் சீர்வரிசையாக கொடுத்ததாகவும், திருமணம் முடித்து அ.சா.1ம், 1ம் எதிரியும் எதிரி சர்தார் வீட்டில் ஒன்றாக கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும், சர்தார் பீடி கம்பெனி வைத்து நடத்தி வந்ததால் அதற்கு பணம் தேவைப்படுவதால் அ.சா.3 தங்கையின் நகையை அடகு வைத்து செலவு செய்ததாகவும், நாங்கள் வீட்டிற்கு சென்றால் கூட அ.சா.3 தங்கையை அ.சா.3 உடன் இணைத்து தவறாக பேசுவதாகவும், அ.சா.3 அவரது தங்கையிடம் விசாரித்தபோது அ.சா.3 னையும், அ.சா.3 தங்கையையும் இணைத்து தவறாக பேசுவதாக அ.சா.3 தங்கை தன்னிடம் கூறியதால், அ.சா.3 அவரது தங்கையின் கணவரிடமும், சர்தாரிடமும் கேட்டபோது அவர்கள் கண்டிப்பதாக கூறியதாகவும், மீண்டும் மீண்டும் பிரச்சனை தொடர்ந்து வந்ததால் நகையை திருப்பி கேட்டபோது நகையை திருப்பி தந்தால் அ.சா.3 தங்கை வேறு யாருடனாவது ஓடிப்போவாள் எனவும், நகையை திருப்பி கேட்டால் கொன்றுவிடுவேன் என்றும் தன்னிடம் மிரட்டியதாகவும், சர்தார் உள்ளூரில் நல்ல இன்புளுயன்ஸ் உள்ளவர் எனவும், அ.சா.3 தங்கை பயந்துபோய் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், அதன்பின்னர் நாங்கள் 2, 3 தடவை சமாதானம் பேசியதாகவும் ஆனால் எதிரிகள் சமாதானமாக வரவில்லை எனவும், அசா.3 தங்கைக்கு ஒரே ஒரு குழந்தை மட்டும் உள்ளதாகவும், அ.சா.3 தங்கை அவரது வீட்டில் தான் குடியிருந்து வருவதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 வண்டிமுத்து சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையதுதான் எனவும், போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து போட்டுக்கொடுத்ததாகவும், எப்போது எங்கு வைத்து போட்டு கொடுத்தேன் என்று அ.சா.4 க்கு ஞாபகம் இல்லை எனவும் சாட்சியம்

அளித்துள்ளார்.

அ.சா.5 திருமதி.ரத்னபால்சாந்தி உதவி ஆய்வாளர் சாட்சியத்தில், கடந்த 15.06.2013 ம் தேதி தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 13.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது சுமையாள் பேகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன்தன்மைப்படி காவல் நிலைய குற்ற எண்.30/2013, சட்டப்பிரிவு 498A, 406, 294(b), 506(ii) IPC and Sec 4 of TNPHW Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 திருமதி.சண்முகவடிவு உதவி ஆய்வாளர் சாட்சியத்தில், 2014 ஆம் வருடம் தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, 08.05.2014 ஆம் தேதி நிலையத்தில் இருந்த போது நிலைய குற்ற எண். 30/2013 வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான செங்கோட்டை காவல் நிலைய பொறுப்பு குற்றால காவல் நிலையம் காவல் ஆய்வாளர் அவர்கள் உத்தரவுப்படி, மேற்படி வழக்கில் தலைமறைவாக இருந்த 1வது எதிரி செய்யது மஜித் என்பவர் கிடைத்த ரகசிய தகவல்படி தென்காசி பழைய பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தவரை காரணம் கூறி 17.00 மணிக்கு கைது செய்து 17:30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 திரு.மன்னவன், காவல் ஆய்வாளர் சாட்சியத்தில், கடந்த 15.06.2013 ம் தேதி குற்றாலம் காவல் ஆய்வாளராக பணி புரிந்த போது, கூடுதல் பொறுப்பாக செங்கோட்டை காவல் நிலையம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் தென்காசி பொறுப்பு வகித்ததாகவும், தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.30/2013 வழக்கினை அ.சா.7 அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு 15.00 மணிக்கு சென்று சாட்சிகள் முத்து, வண்டி முத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதன் பின்பு மேற்படி சாட்சிகளை

விசாரித்தும் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகள் சுமையாள் பேகம், முகைதீன் பாத்திமா, காதர் மைதீன், முகமது இப்ராகிம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.ரத்தினபால் சாந்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிய சார்பு ஆய்வாளர் திருமதி.சண்முக வடிவு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அத்துடன் அ.சா.7 விசாரணையை முடித்து வழக்கு கோப்பினை நிலைய பொறுப்பில் ஒப்படைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.8 திரு.முனீஸ்வரன், காவல் ஆய்வாளர் சாட்சியத்தில், கடந்த 2014 ஆம் வருடம் செங்கோட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கூடுதல் பொறுப்பாக அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 30/2013 வழக்கினை முதல் விசாரணை செய்து காவல் ஆய்வாளர் மன்னவன் அவர்களிடமிருந்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை அ.சா.8 எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்ட போது முந்தைய காவல் ஆய்வாளர் தயார் செய்த வரைபடம் சரியாக இருந்ததால் அ.சா.8 தனியாக வரைபடம் தயார் செய்யவில்லை எனவும், வழக்கு விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் வழக்கின் சட்ட பிரிவினை 294(பி), 406,498(A), 506(1) இதச மற்றும் Sec 4 of TNPHW Act படி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>Questioning 351(i)(b) BNSS</u>**

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக உள்ளவை குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார்கள். தங்களது

தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டு என்று கூறினார்கள். 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் இல்லை என முடிக்கப்பட்டது.

## Point for determination

7. **இந்நிலையில், 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 406, 498(A), 506(i) மற்றும் பிரிவு 4 of TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

## Arguments

8. இவ்வழக்கில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 தனது வாதத்தில், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.1 புகார்தாரர் ஆவார். அவர் தனது சாட்சியத்தில், 1 முதல் 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 க்கு திருமணத்தின்போது 70 கழஞ்சி நகைகளை வாங்கி வைத்து தொழில் செய்து வந்தார்கள் என்பதை வலியுறுத்தியும், அந்த நகைகளை 26.05.2013 ம் தேதி குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் அ.சா.1 கேட்டதற்கு அ.சா.1 யை அசிங்கமாக பேசி, அவமானப்படுத்தி கொலைமிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 சாட்சியத்தினை உறுதிபடுத்தும்விதமாக அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளார்கள். அதனால் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 க்கு திருமணத்தின்போது போடப்பட்ட 70 கழஞ்சி நகைகளை அபகரித்து கொண்டு அ.சா.1 யை மனதளவிலும், உடலளவிலும் கொடுமை செய்தார்கள். அதனால் 1,3 குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான இதச பிரிவுகள் 406, 498(A)–ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே 1, 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9. அதேவேளையில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 க்கும், 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் இடையே 2003 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணம் நடைபெற்ற 2003 லிருந்து இந்த புகார் மனு கொடுத்த 2013 வரை தொடர்ந்து அ.சா.1 யை குற்றம்சாட்டப்பட்டவர்கள் கொடுமை செய்து வந்தார்கள் என்பது நம்பத்தகுந்தவையாக இல்லை. மேலும் அ.சா.1 க்கு திருமணத்தின்போது 70 கழஞ்சி தங்க நகை கொடுக்கப்பட்டது என்பதை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை. அதேபோல் அ.சா.1 சாட்சியத்தில் அவரது நகைகளை குற்றம்சாட்டப்பட்டவர்கள் வாங்கி கொண்டதற்கான காரணமானது சுயதொழில் செய்வதற்கு எனவும், அதேபோல் அ.சா.2 சாட்சியத்தில் அ.சா.1 னின் தகப்பனாரான அ.சா.2 இந்நீதிமன்ற சாட்சியத்தில் 1 வது குற்றம்சாட்டப்பட்டவர் ஏஜென்சி எடுத்து நடத்துவதாக சொல்லி அ.சா.1 னின் நகைகளை சிறிது சிறிதாக வாங்கி முத்தூட் பேங்கில் அடகு வைத்து கொஞ்சநாள் ஏஜென்சி நடத்தியதாக சாட்சியம் அளித்திருப்பதாலும், அதேபோல் அ.சா.1 னின் சகோதரரான அ.சா.3 இந்நீதிமன்ற சாட்சியத்தில் 2 வது குற்றம்சாட்டப்பட்டவரான சர்தார் என்பவர் பீடி கம்பெனி வைத்து நடத்தி வந்ததால் அதற்கு பணம் தேவைப்படுவதால் அ.சா.1 னின் நகைகளை வாங்கி அடகு வைத்ததாக சாட்சியம் அளித்திருப்பதாலும், உண்மையிலேயே இந்த வழக்கு சம்பவத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு அ.சா.1 னின் நகைகளை குற்றம்சாட்டப்பட்டவர்கள் வாங்கி அடகு வைத்து தொழில் செய்யவில்லை என்பது நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரியவருகிறது. மேலும் இந்த வழக்கு சங்கதிகள் அனைத்தும் அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குட்பட்ட எல்கையான ரவணசமுத்திரத்தில் வைத்து நடைபெற்றுள்ளது. இந்நீதிமன்ற அதிகார வாரம்பிற்குள் எந்தவித குற்ற சம்பவமும் நடைபெறவில்லை. அதனால் இந்த வழக்கில் 1, 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை. எனவே 1, 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு சந்தேகத்தின் பலனை அளித்து விடுதலை செய்யுமாறு வாதிடப்பட்டது.

**Appreciation of evidence**

10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை (Fact in issue) என்பது புகார்தாரருக்கும், 1ம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் இடையே கடந்த 25.12.2003;ம் தேதி பொட்டல்புதூர் ஹரி மண்டபத்தில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின்போது புகார்தாரருக்கு 70 கழஞ்சி நகையும், ரூபாய் 60 ஆயிரம் ரொக்கமும் மற்றும் சீர்வரிசை பாத்திரமும் கொடுத்ததாகவும், பின்பு புகார்தாரர் 1 முதல் 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தபோது, 1 முதல் 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கூல்டிரிங்ஸ் மற்றும் பீடி கம்பெனி நடத்தி வந்ததால் முதலீடு செய்வதற்காக புகார்தாரரின் நகைகளை நயவஞ்சகமாக பேசி வாங்கி வைத்துக்கொண்டதாகவும், புகார்தாரரை 1வது குற்றம்சாட்டப்பட்டவர் அடிக்கடி தேவடியா என்று அவதூறான வார்த்தையால் பேசி அடித்து துன்புறுத்தியதாகவும், மேலும் மற்ற குற்றம்சாட்டப்பட்டவர்களும் புகார்தாரரை அடிக்கச்சொல்லி தூண்டியதாகவும், பின்பு புகார்தாரரும், 1வது குற்றம்சாட்டப்பட்டவரும் தனியாக வாடகை வீட்டில் இருந்தபோது புகார்தாரரிடம் இருந்த மீதி நகைகளை 1வது குற்றம்சாட்டப்பட்டவர் வாங்கி வைத்துக்கொண்டு குழந்தைக்கும், புகார்தாரருக்கும் உணவு எதுவும் கொடுக்காததால், நகைகளை புகார்தாரர் திரும்ப கேட்டதற்கு நகைகளை தரமுடியாது என கூறியதால் புகார்தாரர் அம்பாசமுத்திரம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து விசாரணை செய்ததில், இரண்டு மாதத்தில் திருப்பி தருவதாகவும், அதுவரை புகார்தாரர் அவரது பெற்றோர் வீட்டில் இருக்கட்டும் என கூறிச்சென்றதாகவும், பின்பு பல மாதங்கள் ஆகியும் புகார்தாரரின் நகைகளை ஒப்படைக்காமல், 1வது குற்றம்சாட்டப்பட்டவரின் சொத்துக்கள் புகார்தாரருக்கும், அவரது குழந்தைக்கும் சேரக்கூடாது என 2,3 குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் ஒப்படைத்துவிட்டதாகவும், புகார்தாரர் 26.05.2013ம் தேதி நகைகளை கேட்டதற்கு புகார்தாரரை குற்றம்சாட்டப்பட்டவர்கள் மூவரும் பெண் என்றும் பாராமல் தேவடியாவுள்ள செறுக்கியுள்ள தேவடியாமுண்ட என அசிங்கமாக பேசி நகைகளை கேட்டால் உயிரோடு விடமாட்டோம் என கொலைமிரட்டல் மிரட்டினார்களா? மேற்படி

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் செய்ததாக சொல்லும் செயல் இதச பிரிவுகள் 294(பி), 406, 498(ஏ), 506(1) மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழான குற்றத்தில் வருகிறதா? என்பதேயாகும்.

11. மேலே கண்ட தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை குறித்து அரசு தரப்பு சாட்சிகளையும், ஆவணங்களையும் இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்கையில்,

இந்த வழக்கில் 1வது குற்றஞ்சாட்டப்பட்டவர் அ.சா.1னுடைய கணவர், 2வது, 3வது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1னின் கணவரின் உடன்பிறந்த சகோதரர்கள் என்பதும், 1வது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும், அ.சா.1க்கும் 25.12.2003ம் தேதி திருமணம் நடைபெற்றது என்பதும், திருமணத்தின்பயனாக குழந்தை உள்ளது என்பதும் இருதரப்பிலும் எந்தவித பிரச்சனையும் (Undisputed fact) இல்லை.

12. எனவே இந்த வழக்கில் Disputed fact என்பது,

(i) புகார்தாரருக்கும், 1வது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் திருமணம் முடிந்து 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்களுடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தபோது, புகார்தாரருக்குரிய நகைகளை குற்றம்சாட்டப்பட்டவர்கள் வைத்துள்ள கூல்டிரிங்ஸ் மற்றும் பீடி கம்பெனி முதலீடு செய்வதற்காக நயவஞ்சகமாக பேசி வாங்கி வைத்துக்கொண்டு, பின்பு புகார்தாரரை 1வது குற்றம்சாட்டப்பட்டவர் அடிக்கடி தேவடியா என்று அவதூறான வார்த்தையால் பேசி அடித்து துன்புறுத்தி 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்களின் தூண்டுதலினால் புகார்தாரரை 1வது குற்றம்சாட்டப்பட்டவர் அடித்தாரா?

(ii) பின்பு அ.சா.1ம், 1வது குற்றம்சாட்டப்பட்டவரும் தனியாக வாடகை வீட்டில் வசித்து வந்தபோது அ.சா.1யிடம் மீதம் இருந்த நகைகளை 1வது குற்றம்சாட்டப்பட்டவர் வாங்கி வைத்துக்கொண்டு புகார்தாரர் 26.05.2013ம் தேதி நகைகளை கேட்டதற்கு புகார்தாரரை குற்றம்சாட்டப்பட்டவர்கள் மூவரும் பெண் என்றும் பாராமல்

தேவடியாவுள்ள செறுக்கியுள்ள தேவடியாமுண்ட என அசிங்கமாக பேசி நகைகளை கேட்டால் உயிரோடு விடமாட்டோம் என கொலைமிரட்டல் மிரட்டினார்களா?

**Point No.1**

புகார்தாரருக்கும், 1வது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் திருமணம் முடிந்து 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்களுடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தபோது, புகார்தாரருக்குரிய நகைகளை குற்றம்சாட்டப்பட்டவர்கள் வைத்துள்ள கூல்டிரிங்ஸ் மற்றும் பீடி கம்பெனி முதலீடு செய்வதற்காக நயவஞ்சகமாக பேசி வாங்கி வைத்துக்கொண்டு, பின்பு புகார்தாரரை 1வது குற்றம்சாட்டப்பட்டவர் அடிக்கடி தேவடியா என்று அவதூறான வார்த்தையால் பேசி அடித்து துன்புறுத்தி 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்களின் தூண்டுதலினால் புகார்தாரரை 1வது குற்றம்சாட்டப்பட்டவர் அடித்தாரா? என்பது குறித்து பார்க்கையில்,

அ.சா.1 க்கு திருமணத்தின்போது அவரது பெற்றோர்களால் புகார்மனுவில் சொல்லப்பட்டுள்ளதுபோல் 70 கழஞ்சி நகை போட்டார்களா? என்பது சம்மந்தமாக பார்க்கையில், இதுசம்மந்தமாக அ.சா.1 முதல் விசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **"...25.12.2003 ம் தேதி எனக்கும், ஒன்றாம் எதிரிக்கும் பொட்டல்புதூர் ஹரி மண்டபத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனக்கு 70 கழஞ்சி தங்க நகையும், 60 ஆயிரம் ரொக்கமும், பண்ட பாத்திரம் சீர்வரிசையும் கொடுத்தார்கள்..."**

எனவே மேலே கண்ட அ.சா.1 வாய்மொழி சாட்சியத்திலிருந்து, திருமணத்தின்போது அ.சா.1 க்கு அவரது பெற்றோர்களால் 70 கழஞ்சி தங்க நகைகள் அ.சா.1 க்கு அவரது பெற்றோர்கள் போட்டார்கள் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

அதேபோல் அ.சா.1 னின் தகப்பனாரான அ.சா.2 அவரது முதல்விசாரணை சாட்சியத்தில் அ.சா.1 க்கு திருமணத்தின்போது 70 கழஞ்சி நகை சீர்வரிசையாக கொடுத்ததாக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 னின் சகோதரரான அ.சா.3 அவரது முதல்விசாரணை சாட்சியத்தில் அ.சா.1 க்கு திருமணத்தின்போது 70 கழஞ்சி நகை சீர்வரிசையாக கொடுத்ததாக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார்.

அதனால் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் வாய்மொழி சாட்சியத்திலிருந்து திருமணத்தின்போது அ.சா.1 க்கு 70 கழஞ்சி நகை சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்பது தெளிவாகிறது. ஆனால் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் திருமணத்தின்போது அ.சா.1 க்கு 70 கழஞ்சி நகை கொடுத்தார்கள் என்பதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.

இதுசம்மந்தமாக குறுக்குவிசாரணை சாட்சியத்தில் அ.சா.1 கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **"...இஸ்லாமிய முறைப்படி பொட்டல்பபுதூர் ஹரி மண்டபத்தில் வைத்து திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளதில் அவ்வாறு நடந்ததா என்றால் நடந்தது. திருமணத்தின்போது இருவீட்டார் ஜமாத்தார்களும் உட்கார்ந்து நாங்கள் எவ்வளவு நகை கொடுத்தோம், அவர்கள் எவ்வளவு நகை கொடுத்தார்கள் என்று எழுதுவது வழக்கம் என்றால் சரிதான். அதில் எங்களது குடும்பத்தில் உள்ள அப்பா, அம்மா, சாட்சிகளும், அதேபோல் அவர்களது குடும்பத்தில் உள்ள சாட்சிகளும் எதிரியின் அப்பா, அம்மாவும் அதில் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பேசி எழுதியதை செங்கோட்டை ஜமாத்தார்கள், பொட்டல்புதூர் ஜமாத்தார்கள் எழுதிய குறிப்புகளை போலிஸ் விசாரணையின்போது நான் கொடுத்தேன் என்றால் சரிதான்..."**

எனவே மேலே கண்ட அ.சா.1 சாட்சியத்திலிருந்து, திருமணத்தின்போது அ.சா.1 க்கு அவரது பெற்றோர்களால் 70 கழஞ்சி நகையை சீர்வரிசையாக கொடுக்கப்பட்டது என்பதை இரு ஜமாத்தார்களும் திருமணத்தன்று எழுதி கையொப்பம் செய்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

அதனை ஆவண சாட்சியம் மூலம் நிரூபிக்கும்விதமாக, திருமணத்தின்போது அ.சா.1 க்கு 70 கழஞ்சி தங்க நகை சீர்வரிசையாக போடப்பட்டது என்று ஜமாத்தார்கள் எழுதிய குறிப்பினை பெற்று அரசு தரப்பில் சான்றாவணமாக தாக்கல் செய்யவில்லை. அதற்கு முரண்பட்டு நீதிமன்றத்தில் முதல்விசாரணை சாட்சியத்தில், அ.சா. 1 முதல் அ.சா.3 ஆகியோர் திருமணத்தின்போது அ.சா.1 க்கு 70 கழஞ்சி தங்க நகை சீர்வரிசையாக கொடுக்கப்பட்டது என சாட்சியம் அளித்திருப்பதால் மட்டுமே, இதுசம்மந்தமாக எந்தவித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் 70 கழஞ்சி தங்க நகை சீர்வரிசையாக திருமணத்தின்போது அ.சா.1 க்கு கொடுத்தார்கள் என்பது நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

அதேவேளையில் 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 க்கு திருமணத்தின்போது போடப்பட்ட 70 கழஞ்சி தங்க நகைகளை குற்றம்சாட்டப்பட்டவர்கள் வைத்துள்ள கூல்டிரிங்ஸ் மற்றும் பீடி கம்பெனி முதலீடு செய்வதற்காக நயவஞ்சகமாக பேசி அ.சா.1 யிடமிருந்து வாங்கி வைத்துக்கொண்டார்கள் என்பது சம்மந்தமாக பார்க்கையில்,

இதுகுறித்து அ.சா.1 நீதிமன்றத்தில் முதல்விசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **"...நானும், 1 வது எதிரியும் வாழ்ந்து கொண்டிருக்கும்போது எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது. ஒன்னாவது எதிரியும், மற்ற எதிரியும் சேர்ந்து கொண்டு சுயதொழில் செய்யவேண்டு மென்று சொல்லி எனது நகைகள் எல்லாம் வாங்கி அடகு வைத்து தொழில்**

**செய்தார்கள்..."**

எனவே மேலே கண்ட அ.சா.1 சாட்சியத்திலிருந்து, குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 னின் நகைகளை சுயதொழில் செய்யவேண்டும் என்று கூறி வாங்கி அடகு வைத்து தொழில் செய்ததாக தெரியவருகிறது. ஆனால் அ.சா.1 புகார்மனுவிலோ, விசாரணையிலோ குற்றம்சாட்டப்பட்டவர்கள் அவரது நகைகளை வாங்கி வங்கியில் அடகுவைத்து தொழில் செய்ததாக கூறவில்லை. வங்கியில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 னின் நகைகளை அடமானம் வைத்ததற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. ஏற்கனவே குற்றம்சாட்டப்பட்டவர்கள் செய்து வரும் கூல்டிரிங்ஸ் மற்றும் பீடி கம்பெனியில் முதலீடு செய்வதற்காக நயவஞ்சகமாக பேசி அ.சா.1 யிடம் இருந்த நகைகளை வாங்கியதாக உள்ளது.

அதேபோல் இதுசம்மந்தமாக அசா.1 னின் பெற்றோரான அ.சா.2 முதல்விசாரணை சாட்சியத்தில், கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **"...எனது மகள் 2 மாதமாக கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தால். அதன்பின்னர் தனியாக 1ம் எதிரியும், எனது மகளும் குடும்பம் நடத்தினார்கள். 1ம் எதிரி ஏஜென்சி எடுத்து நடத்துவதாக சொல்லி எனது மகளின் நகைகளை சிறிது சிறிதாக வாங்கி முத்துட் பேங்கில் அடகு வைத்து கொஞ்சநாள் நடத்தினார்..."**

எனவே மேலே கண்ட அ.சா.2 சாட்சியத்திலிருந்து, அ.சா.1 திருமணம் முடிந்து இரண்டு மாதம் மட்டும் தான் கூட்டு குடும்பமாக வாழ்ந்ததாகவும், அதன்பின்பு அ.சா.1 ம், 1வது குற்றம்சாட்டப்பட்டவரும் தனியாக வாழ்ந்து வந்தபோது ஏஜென்சி நடத்துவதற்காக அ.சா.1 னின் நகைகளை முத்துட் வங்கியில் அடகு வைத்ததாக தெரிய வருகிறது. அதனால் 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 னின் நகைகள் எதையும்

தொழில் சம்மந்தமாக அ.சா.1 னிடமிருந்து பெறவில்லை என்பது மேற்படி அ.சா.2 சாட்சியத்திலிருந்து தெளிவாகிறது.

அதேவேளையில் இதுசம்மந்தமாக அ.சா.1 னின் சகோதரரான அ.சா.3 முதல்விசாரணை சாட்சியத்தில் நீதிமன்றத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **"...திருமணம் முடிந்து அ.சா.1 ம், 1ம் எதிரியும் எதிரி சர்தார் வீட்டில் ஒன்றாக கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். சர்தார் பீடி கம்பெனி வைத்து நடத்தி வந்ததால் அதற்கு பணம் தேவைப்படுவதால் எனது தங்கையின் நகையை அடகு வைத்து செலவு செய்தார்கள்..."**

எனவே மேலே கண்ட அ.சா.3 சாட்சியத்திலிருந்து, இறந்துபோன 2வது குற்றம்சாட்டப்பட்டவரான சர்தார் என்பவர் பீடி கம்பெனி நடத்தி வந்ததாகவும், அந்த பீடி கம்பெனிக்கு பணம் தேவைப்பட்டதால் அதற்காக அ.சா.1 னின் நகைகளை வாங்கி அடகு வைத்து செலவு செய்ததாக தெரியவருகிறது.

எனவே அ.சா.1 னின் நகைகளை 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் வைத்துள்ள கூல்டிரிங்ஸ் மற்றும் பீடி கம்பெனி முதலீடு செய்வதற்காக நயவஞ்சகமாக பேசி வாங்கி வைத்துக்கொண்டார்கள் என்பது சம்மந்தமாக அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் சாட்சிகளை இந்நீதிமன்றம் மேலே கண்டவாறு பரிசீலனை செய்ததில் கீழ்க்கண்டவாறு தெரியவருகிறது.

(i) அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில், 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் சேர்ந்து கொண்டு **சுயதொழில் செய்ய வேண்டுமென்று** சொல்லி அ.சா.1 னின் நகைகளை வாங்கி அடகு வைத்து தொழில் செய்ததாகவும்,

(ii) அதேவேளையில் அ.சா.1 னின் தகப்பனாரான அ.சா.2 இந்நீதிமன்ற சாட்சியத்தில் 1வது குற்றம்சாட்டப்பட்டவர் **ஏஜென்சி எடுத்து நடத்துவதாக சொல்லி**

அ.சா.1 னின் நகைகளை சிறிது சிறிதாக வாங்கி முத்தூட் பேங்கில் அடகு வைத்து கொஞ்சநாள் ஏஜென்சி நடத்தியதாகவும்,

(iii) அதேவேளையில் அ.சா.1 னின் சகோதரரான அ.சா.3 இந்நீதிமன்ற சாட்சியத்தில் 2 வது குற்றம்சாட்டப்பட்டவரான **சர்தார் என்பவர் பீடி கம்பெனி வைத்து நடத்தி வந்ததால் அதற்கு பணம் தேவைப்படுவதால்** அ.சா.1 னின் நகையை 1, 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் அடகு வைத்து செலவு செய்ததாகவும் தெரியவருகிறது.

அதனால் உண்மையிலேயே 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 னின் நகைகளை வாங்கி அடகு வைத்தார்களா? என்ற சந்தேகம் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக எழுகிறது.

அதேபோல் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின்போது, அ.சா.1 க்கும், 1 வது குற்றம்சாட்டப்பட்டவருக்கும் இடையே 2003 ம் வருடம் திருமணம் நடைபெற்றுள்ளது. அதன்பின்பு 8 ஆண்டுகள் கழித்து 2011 ம் வருடம் அ.சா.1 அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது புகார் கொடுத்து அதற்கு புகார் மனு ஏற்பு ரசீது எண்.471/2011 கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்பு அதே சம்பவத்தை குறிப்பிட்டு இந்த குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது 15.06.2013 ம் தேதி தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலைய எல்கைக்குட்பட்ட ரவணசமுத்திரம் கிராமத்தில் வைத்து நடந்துள்ளது. இதுசம்மந்தமாக இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா.8 விசாரணை செய்யவில்லை. அதனால் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என ஆட்சேபித்தார்.

இதுசம்மந்தமாக பார்க்கையில், அ.சா.1 குறுக்குவிசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **"...சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ரவணசமுத்திரம் என்றால் சரிதான். எனது கணவர், எனது மச்சான் ரவணசமுத்திரத்திற்கு வந்தபோதுதான் இந்த பிரச்சனை ஏற்பட்டதாக எனது புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்..."**

எனவே மேலே கண்ட சாட்சியத்திலிருந்து இந்த வழக்கு சம்பவங்கள் அனைத்தும் ரவணசமுத்திரத்தில் தான் நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகிறது.

அதேபோல் இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா.8 அவரது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் இதுகுறித்து கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **"...அனைத்து மகளிர் காவல் நிலைய அம்பாசமுத்திரத்தில் 2011 இல் புகார் கொடுத்ததாகவும் அதற்கு புகார் மனு ஏற்பு மனு ரசீது எண். 471/ 2011 கொடுத்ததாக உள்ளது என்பது சரி என்றால் சரிதான். அனைத்து மகளிர் காவல் நிலையம் அம்பாசமுத்திரத்தில் எழுதி வாங்கியதை கொடுத்து நகைகளை திரும்ப கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் என்ன எழுதியிருந்தார்கள் என்று அந்த வாக்குமூலத்தை பற்றி இந்த குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த அக்ரீமண்டோ அல்லது விவாகரத்து ஆவணத்தையோ இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கு கொடுக்கப்பட்ட நகைகள் பற்றி மஹரை பற்றி பள்ளிவாசலில் எழுதப்பட்டதை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் ரவணசமுத்திரத்தில் நடந்ததால் அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலைய**

**சரகத்திற்கு உட்பட்டு உள்ளது என்று நான் நீதித்துறை நடுவர் அம்பாசமுத்திரத்திற்கு இந்த குற்ற இறுதி அறிக்கையை அனுப்பவில்லை என்றால் சரிதான்... "**

எனவே இந்த வழக்கு சம்பவம் அனைத்தும் அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலைய எல்கையில் தான் நடைபெற்றுள்ளது எனவும், அ.சா.1 க்கும், குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு இடையே உள்ள பிரச்சனை குறித்து அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரணையில் என்ன முடிவு செய்தார்கள் என்பது சம்மந்தமாக அ.சா.8 விசாரணை செய்யாதது அரசு தரப்பு வழக்கில் மிகவும் வழுத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

அதனால் மேலேகண்டவிதம் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் செய்த ஆட்சேபணையான அ.சா.1 க்கும், 1 வது குற்றம்சாட்டப்பட்டவருக்கும் இடையே 2003 ம் வருடம் திருமணம் நடைபெற்று 2011 ம் வருடம் அ.சா.1 அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது புகார் கொடுத்து அதற்கு புகார் மனு ஏற்பு ரசீது எண்.471/2011 கொடுக்கப்பட்டு அதன்பின்பு அதே சம்பவத்தை குறிப்பிட்டு அ.சா.1, 15.06.2013 ம் தேதி தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள்மீது புகார் கொடுத்துள்ளதால், இந்த வழக்கு சம்பவங்கள் அனைத்தும் அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலைய எல்கைக்குட்பட்ட பகுதியான ரவணசமுத்திரம் கிராமத்தில் வைத்து நடைபெற்றுள்ளதாகும். இதுசம்மந்தமாக அ.சா.8 இந்த வழக்கில் விசாரணை செய்யவில்லை என ஆட்சேபணை செய்தது ஏற்கத்தக்கதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மற்றும் இறந்துபோன 2 வது குற்றம்சாட்டப்பட்டவர் ஆகியோர் சேர்ந்து அ.சா.1 க்கு திருமணத்தின்போது போடப்பட்ட 70 கழஞ்சி தங்க நகைகளை 1,3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மற்றும் இறந்துபோன 2 வது

குற்றம்சாட்டப்பட்டவர் வைத்துள்ள கூல்டிரிங்ஸ் மற்றும் பீடி கம்பெனி முதலீடு செய்வதற்காக நயவஞ்சகமாக பேசி அ.சா.1 யிடமிருந்து வாங்கி வைத்துக்கொண்டார்கள் என்ற fact in issue வை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

அடுத்ததாக புகார்தாரரை, 1வது குற்றம்சாட்டப்பட்டவர் அடிக்கடி தேவடியா என்று அவதூறான வார்த்தையால் பேசி அடித்து துன்புறுத்தி 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்களின் தூண்டுதலினால் புகார்தாரரை 1வது குற்றம்சாட்டப்பட்டவர் அடித்தாரா?

மேற்படி சம்பவம் எந்த தேதியில், எங்கு வைத்து 1வது குற்றம்சாட்டப்பட்டவர் செய்தார் என்று குறிப்பிட்டு புகார்மனுவிலோ, அ.சா.1 சாட்சியத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை. மாறாக அவரது கணவர் சந்தேகப்பட்டு அடிப்பதாகத்தான் அ.சா.1 சாட்சியத்தில் கூறியுள்ளார். இதிலிருந்தே 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தூண்டுதலின்பேரில் 1வது குற்றம்சாட்டப்பட்டவர் அ.சா.1 யை அசிங்கமாக பேசி, அடித்து துன்புறுத்தியதாக கூறியது உண்மையில்லை என்பது தெளிவாகிறது.

மேலும் இந்த வழக்கு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பார்க்கையில், இந்த புகார் மனுவை தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுப்பதற்கு முன்பே, மனுதாரருக்கும், குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இரண்டு முறை அ.சா.1 புகார் மனு கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது.

அதனால் 1வது குற்றம்சாட்டப்பட்டவர் அ.சா.1 யை அடிக்கடி தேவடியா என்று அவதூறான வார்த்தையால்பேசி அடித்து துன்புறுத்தி 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்களின் தூண்டுதலினால் அடித்தார் என கூறிய சங்கதி இந்த நீதிமன்ற அதிகார வரம்பில் நடைபெற்றதா இல்லை அம்பாசமுத்திரம் அதிகார வரம்பில் நடைபெற்றதா என்பதில் சந்தேகத்திற்கு இடமாக இருப்பதால் 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்களின்

தூண்டுதலின்பேரில் 1 வது குற்றம்சாட்டப்பட்டவர் அ.சா.1 யை அசிங்கமாக பேசி அடித்தார் என்ற சங்கதி நடைபெறவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே மேலேகண்டபடி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்ததில் அ.சா.1 க்கு திருமணத்தின்போது போடப்பட்டதாக சொல்லப்படும் 70 கழஞ்சி நகைகள் சம்மந்தமாக அ.சா.1 சாட்சியத்தில், 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 னின் நகைகளை சுயதொழில் செய்வதற்காக வாங்கி அடகு வைத்து தொழில் செய்து வந்ததாகவும், அதேவேளையில் அ.சா.2 சாட்சியத்தில் 1 வது குற்றம்சாட்டப்பட்டவர் ஏஜென்சி எடுத்து நடத்துவதற்காக சொல்லி அ.சா.1 னின் நகைகளை சிறிது சிறிதாக வாங்கி முத்தூட் பேங்கில் அடகு வைத்து கொஞ்சநாள் ஏஜென்சி நடத்தி வந்ததாக சாட்சியம் அளித்திருப்பதாலும், அதேபோல் அ.சா.3 சாட்சியத்தில் 2 வது குற்றம்சாட்டப்பட்டவரான சர்தார் என்பவர் பீடி கம்பெனி வைத்து நடத்தி வருவதால் அந்த கம்பெனிக்கு பணம் தேவைப்பட்டதால் அ.சா.1 னின் நகைகளை 1, 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் அடகு வைத்து செலவு செய்ததாக சாட்சியம் அளித்திருப்பதாலும், இந்த வழக்கு சம்பவங்கள் அனைத்தும் அம்பாசமுத்திரம் தாலுகா ரவணசமுத்திரம் கிராமத்தில் வைத்து நடைபெற்றதாக அ.சா.1, அ.சா.8 ஆகியோர் சாட்சிய்ம அளித்திருப்பதாலும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 க்கு திருமணத்தின்போது போடப்பட்ட 70 கழஞ்சி தங்க நகைகளை குற்றம்சாட்டப்பட்டவர்கள் வைத்துள்ள ஸ்கூல்டிரிங்ஸ் மற்றும் பீடி கம்பெனி முதலீடு செய்வதற்காக நயவஞ்சகமாக பேசி அ.சா.1 யிடமிருந்து வாங்கி வைத்துக்கொண்டார்கள் என்ற fact in issue உண்மையிலே நடைபெற்றது என்பதை இந்நீதிமன்றம் நம்பத்தகுந்த வகையில் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் Point–I க்கு தீர்வு காணப்படுகிறது.

## Point–II

இந்த வழக்கில் அ.சா.1 ம், 1 வது குற்றம்சாட்டப்பட்டவரும் தனியாக வாடகை வீட்டில் வசித்து வந்ததாகவும், அப்போது அ..சா.1 யிடம் மீதம் இருந்த நகைகளை 1 வது

குற்றம்சாட்டப்பட்டவர் வாங்கி வைத்துக்கொண்டதாகவும், அதனை 26.05.2013 ம் தேதி நகைகளை அ.சா.1 கேட்டதற்கு குற்றம்சாட்டப்பட்டவர்கள் மூவரும் அ.சா.1 யை பெண் என்றும் பாராமல் தேவடியாவுள்ள செறுக்கியுள்ள தேவடியாமுண்ட என அசிங்கமாக பேசி நகைகளை கேட்டால் உயிரோடு விடமாட்டோம் என கொலைமிரட்டல் மிரட்டினார்களா? என்பது குறித்து பார்க்கையில்,

அ.சா.1 க்கும், 1 வது குற்றம்சாட்டப்பட்டவருக்கும், 25.12.2003 ம் தேதி திருமணம் நடைபெற்றது முதல் எந்த தேதிவரை 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்களுடன் அ.சா.1 ரவணசமுத்திரத்தில் கூட்டு குடும்பமாக வசித்து வந்தார் என்று வழக்கு ஆவணங்கள் மற்றும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் துலங்கவில்லை. மேலும் அதற்குபின்பு அ.சா.1 ம், 1 வது குற்றம்சாட்டப்பட்டவரும் தனியாக வாடகை வீட்டில் எந்த தேதியிலிருந்து எங்கு குடியிருந்து வந்தார்கள் என்று அரசு தரப்பில் தெளிவுபடுத்தவில்லை.

மேலும் 26.05.2013 ம் தேதி குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் அ.சா.1 சென்று நகைகளை கேட்டதாகவும், அப்போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் மூவரும் அ.சா.1 யை அசிங்கமாக பேசி, நகைகளை கேட்டால் கொலைமிரட்டல் விடுவித்ததாக சொல்லியுள்ளதில்,

அந்த சம்பவமானது 25.06.2013 ம் தேதி எங்கு வைத்து நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. மேலும் இதுசம்மந்தமாக அ.சா.1 குறுக்குவிசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **"...எனக்கு 2003 ல் திருமணம் நடைபெற்ற பின்பு 2013 ல் இந்த பிரச்சனை ஏற்பட்டு அதிலிருந்து தற்போது வரை பிரிந்துதான் இருந்து வருகிறேன் என்றால் 2003 லிருந்து 2013 வரை பிரிந்து இருந்து வருவதால் எந்தெந்த தேதியில் என்னென்ன கொடுமைகள் செய்தார்கள் என்றும், எந்தெந்த நகைகளை அடகு வைத்தார்கள்**

**என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்..."**

மேலே கண்ட அ.சா.1 சாட்சியத்திலிருந்து, 26.05.2013 ம் தேதி குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் அ.சா.1 சென்று அவரது நகைகளை கேட்டதாகவும், அதற்கு குற்றம்சாட்டப்பட்டவர்கள் மூவரும் சேர்ந்து அ.சா.1 யை அசிங்கமாக பேசி, நகைகளை கேட்டால் உயிரோடு விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுவித்ததாக வழக்கில் சொல்லியிருப்பது உண்மையில்லை எனவும், இந்த வழக்கிற்காக 26.05.2013 ம் தேதி மேற்படி சம்பவம் நடந்ததாக புகார்மனுவில் சொல்லப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் மேற்படி அ.சா.1 சாட்சியத்திலிருந்து தீர்மானத்திற்கு வருகிறது.

மேலும் இந்த வழக்கு சங்கதிகளிலிருந்து அ.சா.1 னின் நகைகளை குற்றம்சாட்டப்பட்டவர்கள் வாங்கி வைத்துகொண்டதால், அதுசம்மந்தமாக அ.சா.1, 2011 ம் வருடம் அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது புகார் கொடுத்து விசாரணை செய்ததாகவும், அதன்பின்பு குற்றம்சாட்டப்பட்டவர்கள் நகைகளை கொடுக்காததாலும், அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்காததால்தான், 2013 ம் வருடம் இந்த வழக்கு சம்பவம் குறித்து தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அ.சா.1 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது புகார் மனு கொடுக்கப்பட்டு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளையில் அ.சா.1 அவருக்கு திருமணத்தின்போது போடப்பட்ட நகைகளை குற்றம்சாட்டப்பட்டவர்கள் வாங்கி வைத்துக்கொண்டு, திரும்ப கொடுக்காததால் 2011 ம் ஆண்டே அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் மனு கொடுத்துவிட்டு, அதன்பின்பு 1 வது குற்றம்சாட்டப்பபட்டவருடன் அ.சா.1 சேர்ந்து 2013 ம் ஆண்டு தனியாக வாடகை வீட்டில் குடியிருந்ததாகவும், அப்போது அ.சா.1 யிடம் மீதம் இருந்த நகைகளை 1 வது குற்றம்சாட்டப்பட்டவர் வாங்கி வைத்துக்கொண்டதாகவும், அந்த நகைகளை

கேட்பதற்காக 26.05.2013ம் தேதி அ.சா.1 குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் சென்று கேட்டபோது மேற்படி பிரச்சனை ஏற்பட்டது என்பது இயற்கையாகவே நம்பத்தகுந்தவையாக இல்லை.

ஏனெனில் ஏற்கனவே குற்றம்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் சேர்ந்து அ.சா.1க்கு திருமணத்தின்போது போடப்பட்ட நகைகளை வாங்கி வைத்துக்கொண்டதாகவும், அதனை அவர்களிடமிருந்து திரும்ப மீட்டு தரக்கோரிதான் அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 2011ம் வருடம் அ.சா.1 புகார் கொடுத்து விசாரணை செய்துவரும் நிலையில், மீண்டும் 2013ம் வருடம் அ.சா.1 மீதம் உள்ள நகைகளை 1வது குற்றம்சாட்டப்பட்டவரிடம் கொடுப்பதற்கு Bharatiya Shakshiya Adhiniyam Act பிரிவு 119 இன் படி Human Conduct அடிப்படையில் சாதாரணமாக வாய்ப்பில்லை. அதனால், குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் 26.05.2013 தேதி மீதம் இருந்த நகைகளை கேட்பதற்காக அ.சா.1 சென்றபோது மேலே சொல்லப்பட்டுள்ளபடி இந்த வழக்கு சம்பவத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் ஈடுபட்டதாக சொல்லியிருப்பது உண்மையில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

எனவே இந்த வழக்கில் மேற்கண்ட பரிசீலனைகளின்படி, அ.சா.1ம், 1வது குற்றம்சாட்டப்பட்டவரும் தனியாக வாடகை வீட்டில் வசித்து வந்தபோது அ..சா.1யிடம் இருந்த மீதம் நகைகளை 1வது குற்றம்சாட்டப்பட்டவர் வாங்கி வைத்திருந்ததாகவும், அதனை கேட்பதற்காக 26.05.2013ம் தேதி குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் அ.சா.1 சென்றதாகவும், அதற்கு குற்றம்சாட்டப்பட்டவர்கள் மூவரும் அ.சா.1யை பெண் என்றும் பாராமல் தேவடியாவுள்ள செறுக்கியுள்ள தேவடியாமுண்ட என அசிங்கமாக பேசி நகைகளை கேட்டால் உயிரோடு விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுவித்ததாக கூறியுள்ள Fact in issue வை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என Point–II க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

15. **முடிவாக,**

இவ்வழக்கில் 2 வது குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்துவிட்ட நிலையில், 1, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 294(b), 406, 498(A), 506(i) மற்றும் பிரிவு 4 of TNPHW Act–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து BNSS பிரிவு 271(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

16. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

17. இவ்வழக்கில் 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவர் 15.06.2013 ம் தேதி கைது செய்யப்பட்டு 12.05.2014 ம் தேதி இந்நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். 3 வது குற்றம் சாட்டப்பட்டவர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலியில் முன்பிணை பெற்று 04.10.2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

**Particulars under rule 106 of Criminal Rules of Practice 2019**

| S.No. | Case No. | CC.No.476/2015 | |
|---|---|---|---|
| 1. | Name of the police station and crime number of the offence | Tenkasi AWPS,<br>Cr.No.30/2013<br>U/s.294(b), 406, 498(A), 506(1) IPC, Section 4 of TNPHW Act | Description of the Accused |
| 2. | Name | 1. Syed Majith<br>2. Sarthar (Died)<br>3. Sait | |
| 3. | Father's Name/Husband's Name | Ahamed Meeran | |
| 4. | Occupation | – | |
| 5. | Residence | 1. 2/2001, Railway feeder road, Ravanasamuthiram.<br>2. –<br>3. Jawaharlal nehru street, Shencottah | |
| 6. | Age | 1. 47/14<br>2. –<br>3. 50/14 | |

| | | | |
|---|---|---|---|
| 7. | Occurence | 26.05.2013 | |
| 8. | Complaint | 15.06.2013 | |
| 9. | Apprehension | A1 –15.06.13<br>A2, A3 – AB | |
| 10. | Release of bail | A1 –12.05.14<br>A2, A3 – 04.10.13 | Date of |
| 11. | Commitment | -- | |
| 12. | Commencement of trial | 06.05.2025 | |
| 13. | Closure of trial | 29.07.2026 | |
| 14. | Sentence of order | 08.08.2026 | |
| 15. | Service of copy of judgement of finding on accused | Acquittal | |
| 16. | Explanation of delay | --- | |

**CASE SUMMERY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS IN R.O.C.NO.814/2020/RG/P1, DT.07.04.2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i. | The period of remand of the accused | : | A1 –15.06.13<br>A2, A3 – AB | | |
| ii. | The date of filing of the complaint/final report in the Court | | 18.12.2015 | | |
| iii. | The date of committal of the case to the Court of Session | | --- | | |
| iv. | The date of questioning of the accused under section 228, 240, 246 and 251 fo the Code of Criminal Procedure 1973 as the case may be | | 10.03.2025 | | |
| v. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts:except routine petitions like petitions under section 317 of the Code: | | ---- | | |
| vi. | Date of examination in-chief and cross-examination of witness | | PW1 | 29.07.2025 | 29.07.2025 |
| | | | PW2 | 29.07.2025 | 29.07.2025 |
| | | | PW3 | 02.09.2025 | 02.09.2025 |
| | | | PW4 | 13.10.2025 | -- |
| | | | PW5 | 11.05.2026 | 11.05.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | PW6 | 11.05.2026 | 11.05.2026 |
| | | | PW7 | 23.06.2026 | 23.06.2026 |
| | | | PW8 | 23.06.2026 | 23.06.2026 |
| Vii. | Date of examination of the accused under section 313 of the code | | 03.07.2026 | | |
| Viii. | Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be | | -- | | |
| ix. | Grant of stay by superior courts and the result thereof | | -- | | |

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.08.08 16:16:26 +0530

நீதித்துறை நடுவர், செங்கோட்டை.

**Annexure ;**

**Witnesses on the prosecution side :**

| Prosecution witness No. | Name of Witness | Description |
|---|---|---|
| 1 | Sumaiyal beevi | Complainant |
| 2 | Mohideen fathima | Eye witness |
| 3 | Mohamed ibrahim | Eye witness |
| 4 | Vandimuthu | Observation mahazar |
| 5 | Tmt.Rathnapal santhi | Sub Inspector, Tenkasi A.W.P.S. |
| 6 | Tmt.Shanmuga vadivu | Sub Inspector, Tenkasi A.W.P.S. |
| 7 | Tr.Mannavan | Inspector of Police, Tenkasi A.W.P.S. |
| 8 | Tr.Muneeswaran | Inspector of Police, Tenkasi A.W.P.S. |

**Exhibits marked on the Prosecution Side :-**

| Exhibit Nos. | Description of the Exhibit | Proved by/Attested by |
|---|---|---|
| 1 | Complaint | PW1 |
| 2 | The signature of PW4 in observation | PW4 |

| | | |
|---|---|---|
| | mahazar | |
| 3 | First Information Report | PW5 |
| 4 | Observation mahazar | PW7 |
| 5 | Rough Sketch | PW8 |

**Material Objects produced on the side of Prosecution** :– Nil

**Defense side witness, documents** :– Nil

**Material Objects on the defense side :–** Nil

**குறிப்பு :–**

1. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கவில்லை.

2. குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணையில் இருந்தார்கள்.

3. வழக்கு முடிவு பற்றி காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.08.08 16:16:31 +0530

நீதித்துறை நடுவர், செங்கோட்டை.